புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

இந்துசாதனம்.

விரோதி௵ (1889)

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்:	௵ 1-க்கு ரூ	5-00
இலங்கை, இந்தியா:	" ரூ.	8-00
தொலைவாய்ப்பகுதி:	" ரூ	9.00
தனிப்பிரதி:	சதம்	5

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—	ஒருகலம்	ரூ. 9-00
"	அரைக்கலம்	ரூ. 4-50
"	கால்கலம்	ரூ. 3-00

அடுத்த முறைகட்கு கூடி விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௪0. } யாழ்ப்பாணம்:—விபவ௵ ஐப்பசி௴ ௧௬உ, (1928 நவம்பர் 1) வியாழக்கிழமை { இலக்கம்—ஈடு.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
மதம்பூத்தவிநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, சீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரகப்ஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் ரோகங்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை முத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைமுத்தலுக்கு ரூபா க0. கால் முத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன்மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்து,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

விளம்பரம்.

கீழே குறிக்கப்பட்ட மரங்கள் பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம் உதவி வனபரிபாலனைவர்களால் யாழ்ப்பாணம் விறகு சாலையில் 1928-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 8-ம் திகதி வியாழக்கிழமை காலை 9–15 மணிக்கு விற்கப்படும்.

I. 150 பாலைமரங்கள்
II. 6 முதிரைமரங்கள்
III. ஒவ்வொன்றிலும் 2 தோன் அடங்கிய 3 துவியல் பாலைத்துண்டுகள்
IV. 14 அந்தர் முதிரைத்துண்டுகள்.

ஏனைய விபரங்கள் ஐப்பசி மாதம் 26-ம் திகதி வெளியாகும் 1928-ம் ஆடு 7671-ம் இலக்கக் கசற்பத்திரிகையிலறியலாம்.

J D SARGENT,
CONSERVATOR OF FORESTS
வனபரிபாலனர்.

வனபரிபாலனர் கந்தோர்,
கண்டி, 22-10-1928.
(G. 978.)

மூன்று அருமைவாய்ந்த நூல்கள்.

(1) **மறுபிறப்புத் தூஷண பரிகாரம்.**

இது கிறீஸ்தவர்களுக்கும் சைவர்களுக்குமிடையில் மறுபிறப்பு விஷயமாக நடந்த தருக்க முடிவை இதுவோர் அறிவுபயக்கும் நூல். —192 பக்கங்களையுடையது, விலைசதம் 50.

(2) **மறுபிறப்புத் தூஷண பரிகாரக் கிலிகோலபஞ்சனம்.**

இது கிறீஸ்தமதம் மறுபிறப்புக் கொள்கையுடையதோ அன்றோ? என்பதுபோன்ற பல அரிய விஷயங்களாக யாக்கோபுவுக்கும் ஞானசேகரனுக்குமிடையில் நிகழ்ந்த மேலான தருக்க முடிவு. —57 பக்கங்களையுடையது. விலைசதம் 25.

(3, **கொலைமறுத்தல் பிரசினோத்தரம்.** —விலைசதம் 5.

மேற்படி நூல்கள் விலைப்படும்
பிரதான இடங்கள்.

(1) சி. க. இராஜையன், மணல் தறை ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.
(2) S. S. சண்முகநாதன் புத்தகசாலை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(3) சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில், யாழ்ப்பாணம்.

(Q. 111.)

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

1918 ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக் காரர்.
மூலநிதி 8 லட்சம் ரூபா
இதுவரையிற் கொடுபட்ட பங்குப்பணம் ரூபா 1,22,340.
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.
பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்தகாலமுடிவில் பங்கொன்றுக்கு ரூ. 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும.

தவணைவரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்கப்படும். வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய்ராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும் ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.

காணி தானியங்கள், சில முதலாம் பழுதுபடாத பொருள்களையும் ஈடாகவைத்துக்கொண்டு தக்க பிணையுடன் கடன் கொடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்)

இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

மு. தாமோதரம்பிள்ளை
மனேஜர்.

(Y 65.)

நோவினால் வருந்துவோர்!

முதன் முதல் நினைப்பது ஏதாவது தைலத்தைப் பற்றியே. அதாவது சீக்கிரத்தில் சுகங் கொடுக்கக் கூடிய தைலம் அதுதான்.

லிட்டில்ஸ் ஓரியென்டல் பாம்

ஆதித் தைலமும், இந்த நோவுகளை நிச்சயமாய்க் கண்டிக்கக் கூடியதும் இதுவே.

தலை வலி
நரம்பு வலி
இல் வாய்வு
தொடைப் பிடிப்பு
வாதம்
சுளுக்கு
முதலிய நோய்களுக்கும்,

இதிற் கொஞ்சந் தடவை நிரம்பிய சுகம் கிடைக்கும்.

எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

1—28. Litts Oriental Balm and Pharmaceuticals Ltd. Madras.

(Y. 61.)

யாழ்ப்பாணம்
கீரிமலை மூர்த்திதல தீர்த்தமகிமை.

நகுலமுனியின் கீரிமுகத்தை மாற்றியதும், திசையுக்கிரசோழன் மகள் மாருதப்பிரவல்லியின் குன்மவலியையும் குதிரைமுகத்தையும் நீக்கியதும், அர்ச்சுனன் நளன் முதலிய அரசர்களும் வந்து தீர்த்தமாடும் பெரும்பேறுபெற்றதும் யாழ்ப்பாணத்தில் மூர்த்திதலம் தீர்த்தம் ஒருங்கே யமையப்பெற்றதுமான இந்தக் கீரிமலைத் தலத்திற் பழைய கிணறு ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட ஸ்ரீமத் நாராயணமூர்த்திக்குத் திருக்கோயிலமைத்து அதிற் பிரதிட்டைசெய்து பூசைநடந்து வருகின்றது. டை கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட முருகமூர்த்திக்கு, அதன் பக்கத்தே ஒரு திருக்கோயிலையும், அதற்கு நேர்வடக்கில் வெள்ளாலும் பன்னீர்மரமும் நிற்கின்றமலைச்சாரலில் சிவலிங்கப்பெருமானுக்கு ஸ்ரீ காசியில் எழுந்தருளியிருக்கும் விசுவநாதசுவாமிக்கு அர்ச்சிப்பதுபோல ஆசாரசீலர்கள் தாமே அர்ச்சிக்கத்தக்கதாக ஒருதிருக்கோயிலையும் அமைத்து அவைகளிலே டை மூர்த்திகளைப் பிரதிட்டைசெய்யவேண்டியிருத்தலினால் அடியார்கள் இச்சிவபுண்ணியத்தில் கலந்து தங்களாலியன்ற பொருளுதவி செய்து அருள்பெறுமாறு வேண்டுகின்றேன்.

க. த வடிவேலுமேஸ்திரி,
கல்வெட்டித்துறை.

(Q. 113.)

விசேஷ இனம்.

உயர்ந்த மிலிடேரி காக்கி ட்வில் ஷேர்ட் இரண்டு பக்கமும் மேல்மூடியுள்ள பாக்கட்டும் இரண்டு தோள்களில் ஷோல்டர் பட்டையும் உள்ளது ஒன்று ரூபா 2—8. மூன்று வாங்கினால் 1 பட்டு மப்ளர் இனாம 6 வாங்கினால் ஒரு கம்பளிப் போர்வை இனாம.

புதிய மாதிரி! விலாசம்!

16 முழம் இமிட்டேஷன் சரிகை.

தோட்டி காசிப்பூசேலை!!

இனம்! இனம்!! இனம்!!!

இம்மாதிரியான அசல் தொட்டிப்பூபோட்ட சேலை ரூபா 100, 150, 200 போட்டால் தான் கிடைக்கும்.

எங்களுடைய 22 காரட் ரோல்ட்கோல்ட் சவட்சர்லாந்தில் செய்யப்பட்ட அழகுவாய்ந்த நிறமான 10 வருட உத்தரவாதமுள்ள ரோல்ட் கோல்ட் சில்வெட் கடிகாரம். வாங்குபவர்களுக்கு டை கடிகாரம் பூசேலை இனமாக அனுப்பப்படும். சரியான மணி காட்டும் கடிகாரத்தின் விலை சொற்பமே. ஒரு கைப்பட்டையுடன் ரூபா 10—0—0 தான். தனியாக வாங்கினால் புடவை 1-க்கு ரூபா 5—8—0 ஒரேகாலத்தில் 6 புடவை வாங்கினால் ஒருபுடவை இநாமம் இனம் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

உடனே ஆர்டர் செய்யுங்கள்.

அசோகா அன் கோ,
வேப்பேரி போஸ்ட்,
சென்னைபட்டணம்

ASOKA & Co,
Vepery, P. O,
Madras.

(Q 112)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவஞு
ஐப்பசிமீ ௧௬௳ வியாழக்கிழமை.

வலிகாமம் மேற்கு மணியகாரன் பதவி.

வலிகாமம் மேற்குப்பகுதி மணியகாரனாக விருந்த முதலியார் J. N. சந்திரசேகரம் என்பவர் இறந்துவிட்டமையினால் அவருடைய இடத்தில் இன்னொருவரை நிலையான மணியகாரனாக நியமிப்பது ஆவசியகமோ அன்றோவென்னும் விஷயமாக ஊரில் அபிப்பிராயபேதம் உண்டுபட்டிருக்கிறது. வலிகாமம்மேற்குப்பகுதிக்குப் பிரத்தியேகமான ஒருமணியகாரன்வேண்டுமென்று ஒரு சாராரும், மேற்குப்பகுதியை வலிகாமம் வடக்கு மணியகாரனுடைய பரிபாலனத்திற் சேர்த்துவிடுதலே நன்றென இன்னொருசாராரும் அபிப்பிராயபேதப்பட்டு இருசாராரும் பலகூட்டங்கள் கூட்டிவரலாயினர் இங்குள்ள பத்திரிகைகளும் இந்த விஷயத்தில் இரண்டுபட்டு நிற்கின்றன. வலிகாமத்தின் இருபிரிவையும் ஒன்றுசேர்த்து விடுவதே நல்லதென்னுங்கொள்கையுடையார்தான் கூடிய தொகையினரென அறியத்தக்கதாகவிருக்கின்றது.

மணியகாரன்மார் முற்காலத்தில் மிக்க அதிகாரத்தோடும் பொறுப்போடும் கௌரவத்தோடுங் கூடியவர்களாய் மகாணத்தலைவருக்கு அடுத்த பதவியிலுள்ளவர்களாயிருந்தனரென்று சொல்லலாம். ஆனால் ஊரிற் கல்வியதிகப்பட, அரசியல் விவகாரங்கள் ஊராருக்குப் புலப்பட, சுதந்திர விடாய் மேற்பட, மணியகாரன்மாருக்குரிய மதிப்பும் பொறுப்புங் குறையலாயின. பட்டினசங்கம் சுகாதாரசங்கம் என்னும் இவைகளும் இப்பொழுது எங்கும் நடைபெறும் கிராமச்சங்கங்களும் மணியகாரன்மாரின் பொறுப்பையும் அதிகாரத்தையும் மதிப்பையும் வெகுவாய்க்குறைக்கலாயின. இவற்றோடு மணியகாரன்மாரை ஏனைய உத்தியோகஸ்தர்களைப்போலப் பிரிவுக்குப் பிரிவு மாற்றிவிடும் ஒழுங்கும் அரசினரால் அனுசரிக்கப்படலாயிற்று. சென்றவருடம் இங்குவந்த அரசியல் விசாரணைச் சங்கத்தார் மணியகாரன் பதவியையிட்டு வெளிப்படுத்திய அபிப்பிராய அறிக்கைப் பத்திரத்தில் மணியகாரன்பதவி ஆவசியகமற்றதெனவும், இப்பொழுதுள்ள மணியகாரன்மார் ஒவ்வொருவரும் இளைப்பாற இன்றேல் நீக்கிவிட, அந்தப்பிரிவுகளை மற்றை மணியகாரனுடைய பிரிவோடுசேர்த்து, காலகதியில் இப்பதவியை அறவேயொழித்து விடலாமென்றும் வெளியிட்டிருந்தனர். ஆனால் அரசினர் அவர்களுடைய அபிப்பிராயத்தை அச்சமையத்தில் முற்றாக அங்கீகரிக்கவில்லை. யாழ்ப்பாணமேற்குப்பிரிவுச் சபையாரும் இந்த விதமான அபிப்பிராயத்தை முன்னர்க்கூறியுள்ளனர். மணியகாரன்மாரின் கடமையுட் சிலவற்றை விதானை யுடையார்மாரும் சிலவற்றைக் கிராமச்சங்கமும் வகித்து நடத்துதல் தகையுமென்பதும் அதனால் மணியகாரன்பதவி அனாவசியகமான செலவிற்கு ஏதுவாயிருக்கின்றதென்பதுமே பலருடைய அபிப்பிராயம்.

மணியகாரன் உத்தியோகம் மிகப் புராதனமானதென்றும் ஊரவர்கள் வகிக்கக் கூடிய உத்தியோகங்களுள் அதிகாரத்தோடு கூடியதாயுமிருப்பதால் இந்தப்பதவியையும் ஒழித்துவிடுதல் புத்தியாகுமோவென்று சிலர் எண்ணுவதாக அறியலானோம். புராதனமானதென்பதும் ஊரவரால் வகிக்கப்படுவதென்பதும் உண்மையே. ஆனால் மணியகாரன் பதவியை வகித்திருப்போர் ஊரவர்களாயிருந்தாலும் பெரும்பான்மையும் அவர்கள் தம் மேலதிகாரிகளாகிய மாகாணத்தலைவர் முதலானோரின் குறிப்பறிந்து சரியோ பிழையோ ஒழுகத் தலைப்பட்டுச் சுவாதீனமிழந்தவராய ஊரவர்கள் விஷயத்தில் அதிக அநுதாபமில்லாத நிலையில் நிற்கவேண்டியவர்களாயிருத்தலால் அவர்கள் சுதேசிகளென்ற நியாயம் பற்றி ஊரார்க்கு அதிகம் நன்மையில்லையெனலாம். பட்டினபரிபாலனசங்கம் சுகாதாரசங்கம் கிராமச்சங்கம் என்னுமிவைகள் சுயராச்சியத்திற்கு ஆதாரமானவையென்பதை எவரும் மறுத்தல் முடியாது. இங்ஙனமிருத்தலால் கிராமச்சங்கங்களை விருத்திசெய்து பலப்படுத்தி அவைகளுக்கு அதிகாரத்தைக் கொடுப்பது சுவாதீனத்திற்கு ஆகுமார்க்கமாம். விசாரணைச் சங்கத்தார் முன்னர் அறிக்கையிட்ட பிரகாரம் மணியகாரன் பதவியைக் காலகதியில் ஒழித்துவிடும் நோக்கமிருக்குமானால் வலிகாமம் மேற்கையும் வடக்கோடு சேர்த்துவிடுதலே உத்தமமாகும்.

குஷ்டரோகிகளும் தீபாவலியும்.

கொழும்பிலுள்ள ஹெந்தலைக் குஷ்டரோகிகள் வைத்தியசாலையிலும் மட்டக்களப்பிலுள்ள மாந்திவுக் குஷ்டரோகிகள் வைத்தியசாலையிலும் இருக்கும் சைவக் குஷ்டரோகிகளுக்குத் தீபாவலிக் காலத்தில், சென்ற இரண்டு மூன்று வருடங்களாக இங்குள்ள சிலபுண்ணியசீலர், அவர்கள் நரகசதுர்த்தசிஸ்நானஞ் செய்து உடுத்திகொள்ளும்வண்ணம் புது வஸ்திரம் வாங்கி உதவிவந்தனர். இவ்வருஷமும் தீபாவலி சமீபித்துவிட்டது. ஹெந்தலை வைத்தியசாலையிலுள்ள சைவசமயக் குஷ்டரோகிகள் குறித்த புண்ணிய தினத்தில் தாங்களும் எண்ணெயிட்டு முழுகிக் கோடியுடுக்க ஆசைப்படுவதாகவும் அதற்கு இயன்ற உதவி செய்யும்படியும் விண்ணப்பஞ் செய்கிறார்கள். மாந்திவிலுள்ள சைவக் குஷ்டரோகிகளும் அப்படியே விரும்புகின்றார்கள். ஹெந்தலை வைத்திய சாலையிலுள்ள சைவசமயரோகிகளுள் 71 பேர் ஆண்களும் 19 பேர் பெண்களுமிருக்கின்றனர். மாந்தீவிலுள்ள ரோகிகளின் தொகை தெரியவில்லை. அவர்கள் கூடிய சீக்கிரத்தில் தங்கள் தொகையையும் ஆண்கள் எத்தனைபேர் பெண்களெத்தனைபேர் என்பதையும் எமக்குத் தெரிவிப்பரெனக் காத்திருக்கிறோம். இந்தரோகிகளுக்கு, தீபாவலி புண்ணியகாலத்தில் இப்படியான தானஞ்செய்தல் பெரும் புண்ணியமாகும். மாந்தீவிலுள்ள சைவக் குஷ்டரோகிகளுக்குக் கோடிவஸ்திரம் வாங்கிக் கொடுக்கும்படி ஒரு புண்ணியவான் கொஞ்சப் பணம் இங்கே அனுப்பியிருக்கின்றார் மற்றவர்களும் இவரைப் பின்பற்றுதல் நன்றாம். இவ்விஷயமாக இங்கு அனுப்பப்படும் பணத்தின் வரவுசெலவுக் கணக்குகள் இப்பத்திரிகையிற் பின்னர் வெளியிடப்படும். அன்பர்கள் இவ்விஷயத்தைச் சிந்திப்பார்களாக.

'போம்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம்'

குமரேச சதகம். ௨௨.

பகைக்கத் தகாதவரிவரெனல்.

அரசர்பகை யுந்தவம் புரிதபோ தனர்
மரியகணிகர் பகையு [பகையு
மடுத்துக் கெடுப்போர் கொடும் பகையு
மருளிலாக் கொலைஞர் பகையும் [முட்பகையு
விருமிகு சூரியன் னோருடன் பகையு
விகடப்ர சங்கி பகையும் [மிகு
வெகுசனப் பகையு மிரவாதி யின்பகை
விழைமருத் துவர்கள் பகையும் [யும்
உருமருவு கவிவாணர் பகையுமா சான்
முறவின்முறை யார்கள் பகையு [பகையு
முற்றதிர வியமுளோர் பகையுந் திரி
மொருசிறிது மாகாது காண் [பகையு
வாகதியின் மதலையென வினியசர வண
வருதருண சிறுகுழவியே [மிசையில்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

இ—ள். அரசரின் பகையும், தவஞ் செய்கின்ற முனிவர்களுடைய பகையும் அரிய கணக்கர்களுடைய பகையும், அடுத்துக் கெடுப்போர்களின் வஞ்சகமான விரோதமும், புறத்தே சிநேகம் பாராட்டி அகத்தே பகைமை சாதிப்போரின் விரோதமும், இரக்கமில்லாத கொலைஞருடைய விரோதமும், வலிமை மிக்க வீரியுள்ளோரின் பகையும், மிக்க விகடப்பிரசங்கிகளின் விரோதமும், பலபேரோடு கொண்ட பகையும், மந்திரவாதியின் விரோதமும், விரும்பப்படுகிற வைத்தியரோடு கொண்ட விரோதமும், திறமை மிகுந்த புலவரின் பகையும், அதிக திரவியமுள்ளவர்களாகிய செல்வர்களுடைய பகையும், மந்திரிமாரின் விரோதமும் சிறிதேனும் இருக்கவொண்ணாது; வசுக்களோடு கூடிய கங்கா புத்திரனாகிச் சரவண வாவியில் வந்தருளிய என்றுமிளைய குழந்தையே, மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு மலைமேவு குமரேசனே.

காண்—முன்னிலை யசை. 'வேந்தன் சீறின் ஆந்துணையில்லை'' யென்பதனால் அரசர் பகையும், 'குணமென்னுங் குன்றேறி நின்றார்வெகுளி, கணமேயுங் காத்தலரிது'' என்பதனால் தபோதனர் பகையும், ''புறநட்டகம்வேர்ப்பார் நச்சப்பகைமை வெளியிட்டு வேறுதல்வேண்டு'' மென்றதனால் அடுத்துக் கெடுப்போர் கொடும் பகையும் உட் பகையும், ''ஊருடன் பகைக்கின் வேருடன்கெடும்'' ''உலகத்தோடொத்துவாழ்'' என்பவற்றால் வலியுள்ளோர் பகையும், வெகுசனப் பகையும், ''கொள்ளற்க சொல்லேருழவர் பகை'' யென்பதனாற் கவிவாணர் பகையும், கொள்ளவொண்ணாதெனப் பிறர் கூறியிருத்தலுங் காண்க.

சென்ற வெள்ளிக்கிழமை (26-10-28) வட்டுக்கோட்டைக் கிராமச்சங்கத்தார் கூடிய கூட்டத்தில் வலிகாமம் வடக்குப் பிரிவோடு மேற்குப்பிரிவையுஞ் சேர்த்து ஒரேமணியகாரனுடைய பரிபாலனத்தில் விடவேண்டுமென நிர்ணயஞ்செய்து அரசினருக்கு மனுப்பண்ணியிருக்கின்றார்களென அறியலானோம். ஆனால் அரசினர் இந்த ஒழுங்கைக் காலகதியிற் செய்யலாமென நோக்கங்கொண்டு இப்பொழுது வலிகாமம் மேற்கிற்கு ஒருமணியகாரனைப் புதிதாக நியமித்தற்கான முயற்சிசெய்கின்றனரென அறியக்கிடக்கின்றது.

உலகம் பலவிதம்.

—:o:—

(முன்தொடர்.)

விளையாட்டு முன்றிலில் நின்றும் மீண்டு வந்தவுடன் மாலையாதலும் மணியடிக்க, படிக்கவேண்டுமென்பதே எங்களுக்காகிய கட்டுப்பாடு. தலைமை உபாத்தியாயரோ விடுதிச்சாலை உபாத்தியாயர்களோ யாராயினும் ஒருவர் இருவர் எங்கள் படிப்பை மேற் பார்ப்பதற்காகப் படிக்குஞ்சாலையில் வந்து நிற்பர்; தீபங்கள் பகல்வெளிச்சம்போல் எரிந்து கொண்டு தொங்கும் நாங்களும் படிக்கிற பிள்ளைகள் போல் நிரையேபோய் வாங்குகளில் அமர்ந்திருப்போம். போகும்போது ஏதும் அகப்பட்ட ஒரு புத்தகத்தைக்கையில் எடுத்துக்கொண்டுதான் போவோம். புத்தகத்தை விரித்துப்பார்த்தபடியும் முணுமுணுத்தபடியும் இருப்போம் எவர் அச்சமையத்தில் எங்களைக்கண்டிலும் நாங்கள்படிப்பில் மூழ்கிப் பரவசப்பட்டிருக்கிறோமென்றுதான் நினைப்பர் ஆனால் எங்கள் மனம் வேறு விஷயங்களில் வெகுதூரஞ் சென்றிருக்கிறதென்பதை எவரும் அறிதல் முடியாது. அடுத்தபிள்ளையோடு கதைபேசும்போது தமிழிற்பேசவேண்டுமாயின் தமிழ்ப்புத்தகத்தைப் பார்த்தபடியும் ஆங்கிலத்திற் பேசும்போது ஆங்கிலப் புத்தகத்தைப் பார்த்தபடியும் பிறர் யூகித்து அறியாதபடி பேசிவிடுவோம். இதற்கிடையில் பசி தாகம் மலசல உபாதி முதலியனவும் எங்களை உபாதிப்பதுண்டு. வீட்டிற் செய்யும்படி வகுப்பில் உபாத்தியாயர் தந்த அப்பியாசங்களையாயினும் இந்த நேரத்திற் பார்த்து எழுதிக் கொண்டுபோய் நாமே செய்ததாக உபாத்தியாயருக்குக் காட்டி அவரை ஏமாற்றிவிடலாமோவென்றால், எங்களுள் ஒருவனாயினும் அவற்றைச் சரிவரச் செய்யத்தக்கவனாயிருந்தாலன்றோ நாங்கள் பார்த்தெழுத முடியும். அப்படிச் செய்யத்தக்கவன் விடுதிச்சாலையில் இருப்பதரிதெனலாம். அதனால், அடுத்தநாள் பள்ளிக்கூடத்திற்கு வரும் பிள்ளைகளின் வரவை எதிர்பார்த்திருந்து வகுப்பு நேரத்தில் உபாத்தியாயர் படிப்பிக்கும்போது அதனை அலட்சியஞ் செய்து இவற்றைப் பார்த்தெழுதிவிடுவோம். அந்தப் பையன் செய்த அப்பியாசம் பிழையானால் எங்கள் அப்பியாசமும் பிழையென்பது பார்க்கவும் வேண்டியதில்லை

* * *

இனி விடுதிச்சாலை மாணாக்கராகிய நாங்கள் திருவிழாப் பார்க்கப் போதல் படக்காட்சி கூத்து முதலியன பார்க்கச் செல்லுதல் பெருங் கஷ்டமாம் விடுதிச்சாலை உபாத்தியாயர் இப்படிப்பட்டகருமங்களுக்குச்செல்ல ஒருபோதும் அநுமதி தரமாட்டார். அநுமதி பெறுவது எவ்வளவு கஷ்டமோ அதற்குத்தக இவற்றைப் போய்ப் பார்க்கவேண்டுமென்ற ஆசையும் எங்களுக்கு அதிகப்படுமேயல்லாமற் குறையாது. இதற்காக நாங்கள் சிற்சில சமயங்களில் வீட்டிலுள்ளார்க்குச் சுகமில்லையென்றும்,' வீட்டிலிருந்து காகிதம்வந்ததாக ஒரு காகிதத்தைச் சிருட்டித்துக் காட்டியும் பொய் சொல்லி அநுமதி பெற்றுக்கொண்டு நினைத்த இடத்திற்குப் போய்ச் சேர்வதுமுண்டு. இப்படிப் போனவிடத்தில், எங்களை ஆங்குக் கண்டவர்கள் வந்து விடுதிச்சாலை உபாத்தியாயருக்கேனும், மற்றும் உபாத்தியாயர்கட்கேனும், பெற்றோருக்கேனும் சொல்லிவிட, அவர்கள் எங்களைக் கடிந்து கேட்க, நாங்கள் பொய் சொல்லிப்பார்ப்போம். வாய்க்காவிட்டால் உள்ளதைச்சொல்ல அவர்கள் எங்களைக் கண்டிப்பதுமுண்டு. ஒருநாள் எங்களுள் ஒருபையன் கூத்துப்பார்க்கவிரும்பி, தன் தமையனுக்கு அதிகசுகயீனமென்று பொய் சொல்லி ஒருவாறு விடுதிச்சாலை ஆசிரியரிடம் அநுமதிபெற்றுக்கொண்டு போய்விட்டான். கூத்துக்கொட்டகைக்கு அப்பையன் சென்றபோது, முதல்வகுப்புப் பிரவேசச்சீட்டுப் பெற்றுக்கொண்டு உள்ளே போக, உள்வாசலில் நின்ற ஒருவர் அவனையழைத்துக்கொண்டுபோய்க்கொட்டகையில் ஓர்கதிரையைக்காட்டி யிருக்கச்செய்தார். அவன் இருந்துகொண்டு இந்தப்பக்கம் பார்த்தான்; விடுதிச்சாலை உபாத்தியாயர் இருந்தார்; மற்றப்பக்கந் திரும்பினான் அவன தமையனிருந்தார். அச்சமையத்தில் அவனமனநிலை எப்படியிருந்ததென்பதை சொல்லவும் வேண்டுமா. கற்றரையில் மலங்கழித்த பூனையின் நிலையை யடைந்தான், மெல்ல எழுந்து அவ்விடம் விட்டு வெளியே போய்விட்டான். இவைகள்தான் நாங்கள் அக்காலத்திற்செய்த திருவிளையாடல்கள். இக்காலத்தில் இப்படியிருக்குமென நான் நினைக்கவில்லை ஏதும இருந்தால் அவர்கள் என்னைக் குறைகூறுமல் தங்களைத் திருத்திக்கொள்வார்களாக.

(வரும்.)

காலநிலை.

மழை பெய்கின்றது. இன்னமும் பெய்யும்போற் காணப்படுகின்றது.

வெளிச்ச வீடு.

பருத்தித்துறையில் துறைமுகத்துக் கணித்தாக அரசினர் ஒருபுதியவெளிச்ச வீட்டைக் கட்டுவதற்கு நிச்சயித்திருக்கின்றனர்.

பரிசளிப்பு.

நிகழும் விபவஞு ஐப்பசிமீ ௧௮௳ சனிக்கிழமை (3-11-28) சாயந்தரம் 6 மணிக்கு கோப்பாய் சைவப்பிரகாச வித்தியாசாலைப் பரிசளிப்புக் கொண்டாட்டம் நடைபெறும். அத்தருணம் ஸ்ரீ அ. நாகநாதமுதலியாரவர்கள் அக்கிராசனத்தமர்வர்.

புதிய நொத்தாரிசுமார்.

பிறக்ராசிகளாகிய ஸ்ரீ V. கணபதிப்பிள்ளை, ஸ்ரீ K. பொன்னுச்சாமி, ஸ்ரீ R. கந்தையா என்னுமிவர்கள் யாழ்ப்பாணப்பகுதியிலும, பிறக்ராசி ஸ்ரீ V. S. கார்த்திகேசு சாவகச்சேரி பருத்தித்துறைப்பிரிவிலும ஆங்கிலத்தில் மாத்திரமன்றித் தமிழிலும நொத்தாரிசுமாராக உறுதிகள் எழுதுதற்குத் தத்துவமடைந்திருக்கின்றனர்.

விவாகம்.

நேற்று (31-10-28) மத்தியானம் பன்னிரண்டு மணி வரையில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் நீர்வேலி ஸ்ரீ. விசுவநாதர் மயில்வாகனம அவர்களுக்கும் வண்ணார்பண்ணை, தலையாளி ஸ்ரீ. முத்தையா அவர்களின் புத்திரியும் நமது இந்துசாதன ஆலயத்தில் லேககராக விருக்கும் ஸ்ரீ கதிரவேலவர்களின் கனிஷ்ட சகோதரியுமாகிய ஸ்ரீமதி. சேதுப்பிள்ளையம்மாளுக்கும் மணமகள் கிருகத்தில் விவாகம் வெகு சிறப்பாக நடைபெற்றது தம்பதிகள அட்ட ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்றினிது வாழ்வாராக.

புகைரதத்துள் கொள்ளைக்காரன்.

சென்ற வெள்ளியன்று அவிசாவளையிலிருந்து கண்டிக்குப் புகைரத மூலமாகப் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த ஒரு கங்காணி தனியே ஒரு பெட்டியிலிருந்ததாகவும், இடையில் ஒருவன் அப்பெட்டியில் வாகா புகைரதஸ்தானத்திற் கணித்தாக ஏறிக் கங்காணியைக் கத்தியாற் குத்திவிட்டு அவனிடமிருந்த பணப்பையை அபகரிக்க எத்தனித்ததாகவும், கங்காணியின் கூச்சலினால் புகைரதக் காவலன் புகைரதத்தை நிறுத்திவிட்டு வருவதற்குள் திருடன் ஓட்டம்பிடித்துவிட்டதாகவும், கங்காணி பாதுக்கை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதாகவும் அறிகிறோம. கொள்ளைக்காரன் இன்னும் பிடிபடவில்லையாம்.

இடி வீழ்ந்து மூவர் மாண்டனர்.

தியத்தலாவையிலுள்ள பட்டாளத்தைச்சேர்ந்த போர்வீரர் மூவர் இந்த அக்டோபர்மீ 26௳ இடி வீழ்ந்து உடனே மாண்டனர்.

மயிலிட்டி தெற்கு சைவ வாலிபர் சங்கம்.

மேற்படி சங்கத்தின் ஆதரவில் நிகழும் விபவ வருடம் ஐப்பசிமீ ௧௩௳ (28-10-28) ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் ஓர் கூட்டம் மகாதேவ வித்தியாசாலை மண்டபத்தில் ஸ்ரீ சிவராமலிங்க முத்துக்குமாரு முதலியார் அவர்கள் சபைத்தலைவராயிருக்க தேவாரத்துடன் ஆரம்பமாயிற்று. அத்தருணம் வேதாரணியம் ஸ்ரீமத் தெ. ஈா. அருணாசல தேசிகர் அவர்களால் சைவசமய அநுஷ்டான விதிமுறைகளைப் பற்றிய ஓர் சிறந்த சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. ஈற்றில் ஸ்ரீ பொ. பரமானந்த ஆசிரியர் அவர்களாலும், அக்கிராசனராலும் சில குறிப்புரைகள் கூறப்படக் கூட்டம் 10 மணியளவில் தேவாரபாராயணத்துடன் முடிவுற்றது.

சுடித.

சமாசாரக்கொத்து.

அமெரிக்காவில், ஜனத்தொகையில் நாலுபேருக்கு ஒவ்வொரு வீதம் மோட்டார்வண்டிகள் இருக்கின்றனவாம்.

* * *

சென்றவாரம் கொழும்பிலே ஒரு ஏக்கர் கொண்ட நிலத்தின் விலை, 2300000 ரூபா வென விலை கூறப்பட்டதாம்.

* * *

உலகில் மனிதர் வசிக்கும் பகுதிகளுக்குள்ளே மிகவும் உன்னதமானது திபேத் நாட்டிலுள்ள ஒரு பௌத்த கோயில் ஆகும். இந்தக் கோயில் கடல் மட்டத்திற்கு 17000-அடி உயரத்தில் இருக்கின்றது.

* * *

சென்ற வாரத்தில் சேலத்தில் சிறியதோர் பூகம்பமேற்பட்டது. இடியும், மின்னலும், மழையுமாயிருந்ததால் ஜன்னல்களும் கதவுகளும் பொருள்களும் அசைந்தனவாம். ஜனங்கள் கலக்கமடைந்தார்களாம்.

* * *

தன் மனைவி தன்னுடன் கண்டிக்கு வர மறுத்ததால் அவள்மீது சந்தேகங்கொண்டு அவளைக் குத்திக் கொன்ற மோசஸ் என்பவனுக்குத் திருநெல்வேலி ஜில்லா நீதிபதி தூக்குத் தண்டனை விதித்திருக்கிறார்.

* * *

காப்டன் ஜீ. டி. ஹாவில்லாண்ட் தமது மனைவியுடன் 100-குதிரை வேகமுள்ள விமானத்திலேறி 70-நிமிஷத்தில், பூமியிலிருந்து 21000-அடிக்குமேல் உயரப் பறந்தாராம். இது தான் இதுவரை பறக்கப்பட்டிருக்கும் மஹா உன்னதமாகும்.

* * *

உலகிலுள்ள கிணறுகளெல்லாவற்றையும் விட அதிக ஆழமான கிணறு கலிபோர்னியாவில் ஒலிந்தா என்னும் இடத்திலிருக்கும் எண்ணெய்க் கிணறுதானாம். அதன் ஆழம் 8,406 அடி. இதற்கு அடுத்தபடியாகக் கூறக்கூடிய கிணறு ரோஸ் கிரான்சிலிருக்கிறது. அதன் ஆழம் 7,591 அடி.

* * *

அமெரிக்கா நியூயார்க்கில் ஸ்ரீமதி ஆர்கன் ஷடிலவெல் என்ற மாது தனது கணவன் இறந்த துயரம் பொறுக்காது, தான் தங்கியிருந்த விடுதியின் பன்னிரண்டாவது மாடியிலிருந்து கீழே குதித்து உயிர் துறந்தாள். தனது கணவன் இறந்த பின் தான் இவ்வுலகில் இருப்பதால் பயனில்லையென்று அவள் ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தாளாம்.

* * *

சில தினங்களின் முன் மத்திய லண்டனில் ஏற்பட்ட கடும் புயலின் பயனாக ஏற்கனவே நினைத்ததைவிட மிகவும் அதிகமான சேதமேற்பட்டிருப்பதாக இப்பொழுது தெரியவருகிறது. ஸோமேஹா ஜில்லாவில் சில நிமிஷங்களே புயலடித்ததாம். 15000 பவுன் முதல் 20000 பவுன்வரையில் அங்கு பொருட் சேதமேற்பட்டிருக்கிறது.

* * *

பாஞ்சாலத் தேசாதிபதி லாகூரில் சென்ற செவ்வாய்க்கிழமை அரசாங்க மாளிகைக்குச் சென்ற சமயம் அவருடைய மோட்டாருக்கு முன் 50-வயது கொண்ட ஸ்திரீ யொருத்தி சரேலெனப் படுத்துக்கொண்டாள். போலீசார் அவளைப் பிடித்துச் சென்று விசாரித்ததில் தன் பிள்ளைக்கு விதிக்கப்பட்டிருக்கும் மரண தண்டனை நீக்கப்பட வேண்டுமென்றும் இல்லாவிட்டால் தான் தற்கொலை புரிந்து கொள்ளத் தயாராயிருப்பதாகவும் தெரிவித்தாள். என்னே இவளது மனப்பிராந்தி! இவளது சித்தம் சுவாதீன மில்லாதிருப்பதாகப் போலீசார் கருதுகின்றனர்.

சைவப்பிரசங்கம்.

இந்த மாசம் பன்னிரண்டாந் திகதி (28-10-28) ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் சுன்னாகம் சைவ வித்தியாசாலை மண்டபத்தில் சுன்னாகத்திலும் அதனை யடுத்த ஊர்களிலு முள்ளவர்கள் கூடிய சபையில், வேதாரணியம் ஸ்ரீமத். அ. சோமசுந்தரக் குருக்களவர்கள் "சிவபக்தி" என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு ஓர் பிரசங்கம் செய்தனர். பிரசாரகரவர்கள் மேற்படி விஷயத்திற்கு இன்றியமையாதனவாயுள்ள சிவ பரத்துவம், சிவ பூசை, சிவ தீட்சை என்பவைகளின் மகத்துவத்தை விரிவாகவும் நுணுகிய ஆராய்ச்சியுடனும், எல்லோரும் கேட்டு ஆனந்திக்குமாறு மிகத் தெளிவாக விளக்கி சபையாரை மகிழச் செய்தனர். பின்னர் திருவாளர்கள். தெ. ச. துரையப்பாபிள்ளை வ. விசுவநாதபிள்ளை, த. நா. சின்னத்தம்பி, ம. செல்வம் ஆகிய இவர்கள் குருக்களவர்களின் பிரசங்கத்தையும், கல்வித் திறமையையும் மிகப் பாராட்டிப் பேசினர். அன்றியும் குரு ஒருவர் ஊரில் வசித்தால் அவ்வூர், சமயம், ஒழுக்கம், கல்வி முதலியனவற்றில் விருத்தியடையும் என்றும் குருக்கள் மடம் ஒன்று அவசியம் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்றும் கூறினர். சபையார் அவர்கள் கூற்றை அநுசரித்து சுன்னாகத்தில் ஒரு மடம் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதற்கு ஒரு நிருவாக சபையாரை ஏற்படுத்தினர்.

கடி.

பட்டப்பகலில் திருட்டு.

சென்றவாரம், கொழும்பிலுள்ள கிழைவங்கியில் (Eastern Bank) சிறுப்பரொருவர் 5000 ரூபா தொகைகொண்ட நோட்டுக் கட்டை ஒருபுறத்து வைத்துவிட்டு வேறு கருமம் பார்க்கும்போது ஒருவன் அதனை எடுத்துக்கொண் டோடிவிட்டானென்றும், திருடன் அகப்படவில்லையென்றுஞ் சொல்லப்படுகிறது.

முற்காலத்துத் தீபாவளியும் தற்காலத்துத் தீபாவளியும்.

—: :—

'ஒருகையில் நீர்நிறைந்த தோண்டியும் ஒருகையில் நெருப்புநிறைந்ததோண்டியும்.'

தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசார சபை வெளியீடு.

முன் ஒரு காலத்தில் நரகாசுரன் என்ற ஒரு அரக்கன் தேவர் முதல் மனிதர் வரையில் பலரையும் துன்புறுத்தியும் கொன்று தின்றுகொண்டும் வந்தான். அதனால் நம் மூதாதையர்கள் அவனுக்குப் பயந்து வாழ்ந்து வந்தார்கள். அரக்கன் வந்து விட்டான் என்ற சப்தம் கேட்டவுடனே இராஜாளியின் வருகையைக் கேட்ட கோழியானது தன் குஞ்சுகளுடன் கூண்டில் ஒளித்துக்கொள்வது போல நம் பெரியோர்கள் குழந்தைகளை இழுத்துக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்து கதவைத் தாளிட்டு நல்லுயிரின்றி "நித்தியகண்டம் பூர்ண ஆயுஷ்யமாக" நடுங்கி ஒளித்துக்கொள்ளுவார்கள் 'இப்படிப் பலநாளும் கஷ்டப்பட்டுக்கொண்டு வந்த நம் பெரியார்கள் ஒருநாள் கிருஷ்ண பரமாத்மாவினிடம் சென்று நரகா சூரனால் தங்களுக்கு நேர்ந்துள்ள ஆபத்தை முறையிட்டுக் கொண்டார்கள். உடனே கருணாநிதியான கிருஷ்ண பரமாத்மா கோபாவேசத்துடன் புறப்பட்டு நரகாசூரனை எதிர்த்துப் போராடி அவனை எமனுக்கு விருந்திட்டார். அக்கணமே தேவர்களும் ஜனங்களும் மகிழ்ந்து இன்றோடு நமதுடைய துன்பங்கள் தொலைந்தன என்று ஆரவாரஞ் செய்து சந்தோஷித்து கிருஷ்ண பரமாத்மாவை பலவாறு புகழ்ந்துத் தோத்திரஞ் செய்துக் கொண்டாடினார்கள். அரக்கன் அழிந்ததால் ஆபத்து ஒழிந்தது என்ற சந்தோஷ மிகுதியால் ஜனங்கள் அன்று ஸ்நான சுத்தராகி ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக் கொண்டு ஆலயஞ் சென்று இறைவனே! "எங்களுக்குண்டாகிய பயங்கர ஆபத்துத் தொலைந்தது. அதனால் இனி எவ்வுயிருக்கும் நாங்கள் ஆபத்து விளைவிப்பதில்லை. பிறருக்குண்டாகும் ஆபத்தை எம்முயிர் போனாலும் நீக்க முயல்வோம். எல்லா ஜீவனகளிடத்தும் அன்பாயிருக்கிறோம். தாமரைபோன்ற தங்கள் இரு அடிகளையும் என்றும் மறவோம் இனி, இம்மாதிரியான ஆபத்தின்றி எங்களை ரட்சிக்க வேண்டும்" என்று வாயினால் தாங்கள் கண்ட உண்மை மார்க்கத்தைச் சொல்லி பலவாறு தோத்திரம் பண்ணி கையினால் பூவும் புனலும் கொண்டர்ச்சித்து தூபதீபங்கள் பலவிதமாய் ஏற்றி பூஜித்துத் தங்கள் தங்கள் இல்லம் சென்று தங்கள் பந்துமித்திரர்களுடன் பலவிதமான அறுசுவை ஆகாரங்களுடனும் பலகாரங்களுடனும் புசித்து ஏழைகளுக்குமிட்டு தானதருமங்கள் பல புரிந்து களிப்புடன் ஆனந்தமாக் கடலில் மூழ்கி இருந்தார்கள். தங்களிடம் வளரும் ஆடு மாடுகளுக்கும் நல்ல புல் முதலியவைகள் போட்டும் அன்று எந்த ஜீவன்களுக்கும் துன்பமின்றிப் பாதுகாத்து அந்நாளைப் பொன்னாளாய்ப் போற்றி மாலையில் வரிசை வரிசையாகத் தீபங்களை ஏற்றி "தீபாவளி" என்று அந்நாளுக்குப் பெயருமிட்டு இப்படியே வருடா வருடம் கொண்டாடுவதெனப் பரம்பரையாய்க் கொண்டாடி வந்தார்கள். இக்காலிலோ தீபாவளி என்ற பெயரைக் கேட்டவுடனே எத்தனை ஆடுகள், ஐயோ எங்கள் பாலையும் செய்யையும் பசி தீரக்குடித்துவிட்டு எம்மை இன்று பதைக்கப் பதைக்கக் கொல்லப் போகின்றார்களே! எங்கள் ஆபத்தைத் தீர்க்க எந்தத் தயாநிதியும் இல்லையா? என்று கதறுமோ? புலையன்றன் மலமூன்றும் எமை புண்ணும் மனிதற்குக் குலமென்ன நலமென்ன (கூ! கூ! என எத்தனை கோழிகள் கூவியழுமோ! மாமலத்தை உண்ணும் எங்களைப் புசிக்கும் பூமான்களும் புவியிலிருக்கிறார்களா? அந்தோ! அப்பாவிகளிடத்திருந்து எம்மைக்காக்க ஒரு கருணாநிதியும் இல்லையா? என்று எத்தனை பன்றிகள் உறுமுமோ? அந்தோ தங்கள் பெரியார்கள் கண்ட உண்மை மார்க்கத்திற்கு விரோதமாயும், ஆடு, கோழி, பன்றிகளுக்கு நரகசூரராயும் இக்காலத்தில் மாறிவிட்டார்களே! என்ன விந்தை! இறைவனைப் பூவாலும் புனலாலும் பூஜிக்கும் கைகளில் இக்காலிலே கத்தியும் ரத்தமும் தோய்ந்து கிடக்கின்றனவே! தோத்திரஞ் செய்யும் வாய்களிலே புலாலும் எலும்பும் புகுந்து விட்டனவே! அந்தோ இப்படியும் தூய நாட்களிலே தீய காரியங்களை செய்யலாமா? நம் பெரியார்கள் அன்று இறைவனைத் தொழுது கண்ட உண்மைகளை மற்றொருதரம் படித்துப் பாருங்கள். தீபாவளி என்பதற்குரிய அருத்தமும் அதன் கருத்தும் புலப்படும். அக்காலிலே எந்த ஜீவன்களுக்கும் ஆபத்துண்டாகாமல் பார்க்க வேண்டுமென்பதே! ஏனோ அதற்கு மாறாகத் தீபாவளியை நாசமாக்குகிறீர்கள். சௌளம், நாமம், பள்ளிவைத்தல், உபநயனம், கலியாணம் கருமாந்திரம் இவைகளின் விதிகளில் ஏதாவது மாறினீர்களா! அமாவாசை, கிருத்திகை, ஏகாதசி இந்நாட்களில் எவ்வளவு தூய்மையாய் நடக்கிறீர்கள். இந்தத் தீபாவளியை மாத்திரம் ஏன் கொலையோடு கூடிய பண்டிகையாக மாற்றி விட்டீர்கள். வருஷத்திற் கொருமுறை வரும் இந்நாளைப் பொன்னாளாக்கொண்டு புனிதமான வழியில் கொண்டாடிப் புண்ணியம் பெறக் கூடாதா? அநியாயமாக மனிதத் தன்மையை யிழந்துக் கருணையின்றி இந்நாளில் ஆடுகோழிகளுக்கு ஆபத்தை விளைவிக்கலாமா? இது தருமமா! நியாயமா! கடவுளுக்குச் சம்மதமா மா! சந்ததிகள் கடமையாமா! யோசித்துப் பாருங்கள். நீங்கள் கெடுவதுமன்றி இந்நாளிலே உங்கள்பிள்ளைகளையும் கூட்டி நரகாசூரர்களாக்கி விட்டு விடுகிறீர்கள். கேவலம் வயிற்றை நிறப்பவும் நாக்கின் ருசிக்காகவும் அல்லவா உங்கள் அறிவை விற்று அறமார்க்கத்தை விட்டு நழுவி விழுகிறீர்கள். நல்ல காய் கனி கிழங்கில்லையா? இதுவே மனித உணவு. மாமிசம் மிருக உணவு. மரக்கறியே இந்தியாவின் பக்தி உணவு என்பதை உணருங்கள் புலால் புசித்தலை விடுங்கள். கொலைக்கஞ்சுங்கள். நரகத்திற்கும் பாவத்திற்கும் நடுங்குங்கள். சிலர் "படிப்பது திருவாசகம் இடிப்பது சிவன்கோயில்" என்றபடி ஒருபக்கம் ஆடு, கோழி, பன்றிகளை அழித்துத் தின்னல் மற்றொரு பக்கம் குளித்தல், மதக்குறியைப் பட்டையாக வைத்தல் ஆலயஞ் செல்லுதல், பக்தியாய்ப் பூஜித்தல், சாஸ்திரங் கேட்டல் தானதருமம் பலவியற்றல் முதலியவைகளை விடாமல் செய்கிறார்கள். இவைகளால் கொலைப் பாவம் விடுமா? விடாது. இஃது ஒருவன் ஒருகையில் நெருப்பு நிறைந்த தோண்டியையும் மற்றொரு கையில் நீர் நிறைந்த தோண்டியையும் ஏந்திக் கொண்டு அந்நெருப்பின் அனல் தேகத்தில் வீசாமல் இப்பக்கத்துத் தண்ணீர் தணிக்க வேண்டுமென்று எதிர்ப்பது போல இருக்கின்றதல்லவா! அதனால் தான்'.

"கங்கையிற் படித்திட்டாலும்
கடவுளைப் பூஜித்தாலும்
மங்குற்போற் கோடிதானம்
வள்ளலாய் வழங்கினாலும்
சங்கையில்லாத ஞான
சாஸ்திர முணர்ந்திட்டாலும்
பொங்குறும் புலால் புசிப்போன்
போய் நரகடைவனன்றே".

என்று கூறியுள்ளார். ஆகையால் பெரியோர்களே! எல்லாப் பாவத்திற்கும் தலையாயது கொலை. அதை நீக்க எந்தப் புண்ணியமும் எதிர் நிற்காது. ஆகையால் கொல்லா விரதங் கொள்ளுவதே மேலான புண்ணியமாகும் ஆதலால் இவ்வருடம் தீபாவளியில் எந்த ஜீவன்களுக்கும் ஆபத்தின்றிப் புனிதமான வழியில் கொண்டாடுங்கள். புண்ணியம் பெறுங்கள். ஒவ்வொரு வகுப்பாரும் கூட்டங்கூடி இந்தத் தீபாவளியை ஒரு கொலையுமின்றி நடத்த வேண்டுமென்று தீர்மானஞ் செய்து நல்வழியில் நிருத்துங்கள். இந்நாளில் எந்த ஜீவன்களுக்கும் ஆபத்தின்றிப் பார்த்துக்கொள்வதே அக்காலத்தில் அரக்கனிடத்தில் கஷ்டப்பட்ட நம் பெரியார்களுக்கு அவர்களின் சந்ததியார்களாகிய நாம் செய்ய வேண்டிய நன்றியும் கடமையும் என்று உணருங்கள்.

"நல்லறஞ் செய்வோர் நல்லுலகடைவார்
அல்லறஞ் செய்வோர் அருநரகடைவார்"

என்பதை நினையுங்கள். ஆடு கோழிகளுக்கு அபயந்தந்து அவைகளின் வாழ்த்தையும் கடவுளின் ஆசீர்வாதத்தையும் பெறுங்கள் குடியையும் விட்டு விடுங்கள். மகாவீரரும், புத்தரும்; தாயுமானவரும், இராமலிங்கஸ்வாமிகளும் கண்ட அஹிம்ஸா தர்மத்தின் வழி நின்று முற்காலத்துத் தீபாவளியைப் போல் கொண்டாடுங்கள்.

திவாநிசி முகூர்த்தமும் அபிசித்து முகூர்த்தமும்.

அஃதாவது:—பகற் கால அளவினை பதினைந்து கூறுசெய்து முதற் கூறு திருவாதிரைக்குரிய காலமென்றும் அதற்கதிதேவதை உருத்திரன் ஆதலால் அதற்கு உருத்திர முகூர்த்தமென்றும், இரண்டாங் கூறு ஆயிலியத்திற்குரிய காலமென்றும், அதற்கதிதேவதை சர்ப்பமாதலால் சர்ப்ப முகூர்த்தமென்றும், எட்டாங்கூறு அபிசித்து நட்சத்திரத்திற்குரிய காலமென்றும், அதற்கதி தேவதை விஷ்ணுவாதலால் விஷ்ணு முகூர்த்தமென்றும் விதிக்கப்பட்டிருக்கின்றன. இருக்கும் இந்த நியதியை அநுசரித்தே கொள்ள வேண்டும். எட்டாவது காலத்தின் முகூர்த்தம் விஷ்ணு முகூர்த்தமானாலும் அபிசித்து முகூர்த்தமென்றே கைக்கொள்ளுகிறார்கள்.

"பச்சைப் புரவியொரேழுறு தேரோன்பக
லளவி னுச்சிப்படுங் கன்னன்றபிசித்தென்ப
ரோங்கொளியோன்—மெச்சப் படுங் குற்ற
மாருயிரந் தீர்க்கும் வெய்யவாழி—யச்சுதன்
றேரொரக்கர்க்கொல்லுமாறெனவாயிழையே'

இ—ள். ஒரு முகூர்த்தமாவது இரண்டு நாழிகையாகப் பகலளவில் சூரியன் மத்தியான காலத்தில் எட்டா முகூர்த்தம் அதற்கு உத்தமமான அபிசித்து முகூர்த்தமென்று பெயராம். இம் முகூர்த்தம் ஆருயிரங் குற்றங்களைக் கெடுக்கும். அஃதெதன்போலவெனிற் கோடி சூரியப் பிரகாசமுள்ள சக்கராயுதநாளுடைய நாராயண மூர்த்தி புயபல பராக்கிரமத்தையுடைய இராக்கதரைக் கொல்லுமாறுபோல என்பதாம்.

அபிசித்தென்னும் நட்சத்திரம் சந்திர மண்டலத்தின் மேல் இலக்கம் யோசனை தூரத்தில் இருக்கிறதாகப் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. உத்தராட நட்சத்திரத்தின் முடிவில் 15நாழிகையும், திருவோணத்தொடக்கத்தில் நாலு நாழிகை நாலு விநாடியும் அபிசித்து நட்சத்திரத்தின் காலப் பிரமாணமென்று சோதிட நூல் கூறும். ஆகவே அபிசித்து நட்சத்திரத்தின் ஆதியந்தகாலம் 19நாழிகை, 4விநாடியாகும்.

திதி வார நட்சத்திர யோக முதலாகிய பஞ்சாங்க சுத்தியான நாளில் நல்ல சுப இராசியில் வரும் அபிசித்துவேளையில் செய்யப்படுங் கருமங்கள் நெடுங்காலம் நற்பலனைக் கொடுக்கும். அவசரமாகப் பிரயாணஞ் செய்யவும் ஒரு கருமத்தைத் தொடங்கவும் நேர்ந்தபோது பஞ்சாங்க சுத்தியில்லாவிட்டாலும் இந்த அபிசித்து வேளையில் தொடங்கினால் நன்மையைச் செய்யுமென்பது துற்றுணிபு. ஆபத் காலத்திலும் அதிக அவசரமான காலங்களிலும் பஞ்சாங்க யோகம் நன்றாக இல்லாதிருந்தாலும் இப்படிச் செய்வதே யன்றி மற்றைக் காலங்களில் பஞ்சாங்க சுத்தியையும் அநுசரித்தே செய்யவேண்டும். நிற்க,

உஷ:ப்ரசஸ்யதேகர்க:சகுனஞ்சப்ருஹஸ்பதி!
அங்கிராமநவுத்ஸாஹோ
விப்ரவாக்யோஜநார்தந:!!

என்னும் சுலோகப்படி உஷத் காலமாகிய அதிகாலையில் எந்தக் கருமத்தையுஞ் செய்தால் நன்மையுண்டென்று கர்க்க முனிவர் மதம். நல்ல சகுனங்களைப் பார்த்துச் செய்வது பிரகஸ்பதி மதம். மனசில் சந்தோஷக்கிளர்ச்சியுண்டான போது செய்வது அங்கிரஸ முனிவர் மதம். பிராமணோத்தமர்களுடைய வார்த்தையைக் கேட்டுச் செய்வது ஜநார்த்தன முனிவர் மதம், "மனோஜயந்து மாண்டவ்ய" என்றபடி மனதில் தைரியமுண்டானபோது எக்கருமங்களையுஞ் செய்வது மாண்டவ்ய முனிவர் மதம்.

இங்ஙனமாக இவ்வருஷம் விஜய தசமியிலன்று மரணயோகமும் செவ்வாய்க்கிழமையுமாயிருந்தலால் பிள்ளைகளுக்கு வித்தியாரம்பம் (ஏடு தொடக்குவது) குற்ற மென வெண்ணி அனேகர் அதனைச் செய்யாது விட்டனர். அவர்களது அறிவின்மையை என்னென்று சொல்வது.

மேலே காட்டிய "புரவியோரேழுறு தேரோன்" என்பதற்கு எழு குதிரை பூட்டப்பட்ட தேரையுடைய சூரியன் என்று புராண முதலியவற்றிற்கும் உரை சொல்லுபவர் தாமும் சொல்லுகின்றார்கள். அமரம் மகாபாரத முதலியவற்றில் "சப்தாஸ்வம்" என்னும் பெயரையுடைய குதிரை பூட்டப்பட்ட எனக் கருதி விளங்க வைத்திருக்கின்றார்கள். "சப்த" என்பதை ஏழு என வைத்துக் கொண்டு அப்படிச் சொல்லுகின்றார்கள் போலும். ஏழு குதிரையல்ல "சப்தாஸ்வம்" என்னும் பெயரையுடைய ஒரு குதிரைதான் என்பதை விளங்கக் கடவர்கள். அதற்கு அநேக பிரமாணங்களிருக்கின்றன.

அச்சுதன் அழியாதவர் என்பது பொருள். அவ் விஷ்ணு சகலவர்க்கத்தப்பட்டவராதலால் உபசாரமாகக் கூறியதேயன்றி உண்மையன்று.

இந்த அபிசித்து முகூர்த்தத்தை தேவேந்திர முகூர்த்தமென்றும் பெரியோர்கள் சொல்லுகின்றார்கள்.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
அம்மன்கோயில், சுதுமலை.

சத்தியாக்கிரகம்.

ஓர் சம்பாஷணை.

1

(முன்றொடர்.)

நான் சிறுவயனா* இருக்கும்பொழுது என் தகப்பனுருக்கு உணவு வயலிலே கொண்டு போய்க் கொடுப்பதுண்டு. அப்பொழுது தகப்பனுர் எனக்கு முதலளித்துத்தான் பின் சாப்பிடுவது வழக்கம். அச் சாப்பாட்டின் சுவை போன்ற சுவையை நான் இன்னும்காணவில்லை. பெண்சாதியை "அடிசிற் கினியாள்" என்று பிதற்றுகிறார்களே! நான் சமுசாரியாயிருந்தும் பெண்சாதி எப்படி அடிசிற்கினியாள் என்று எனக்கு விளங்கவில்லை. சிலசமையங்களில் வயலிலிருந்து வரும்பொழுது, தாயார் பறித்துக் கொடுத்த கொம்மடிப்பழத்துடன் அல்லது வெள்ளரிப்பழத்துடன் வீட்டுக்குவந்து சேருவேன். அப்பொழுது இருந்த சந்தோஷத்தையும் பராக்கிரமத்தையும் இப்பொழுது கந்தோரிலிருந்து என் சம்பளமாகிய 200 வெள்ளியையும் எடுத்துக்கொண்டு வரும்பொழுதுதானும் காணவில்லையே! என் சீவியத்தை நோக்கும்போது இளங்கன்று துள்ளி விளையாடினகாலம் நான் கமக்காரனுடைய பிள்ளையா யிருக்கும் பொழுதென்றே சொல்லுவேன்.

இறந்துபோன இச்சந்தோஷமான காலத்தைத் தேடுவதற்கும் "தன்தொழில் விட்டவன் சாதியில் கெட்டவன்" என்னும் அலப்பேரை நீக்கவும், கமத்தொழிலைப்பற்றிப் பொழுதுபோக்காய் நான் படித்துச் சமீபத்தில் அச் சோதனையில் சித்தியடைந்ததும் உமக்கு நன்கு விளங்கும். நான் இதுவரையிலும் என் சமக்காரனுயிருக்கவில்லையென்பதைப்பற்றி உமக்கு மறைத்து வைத்திருந்தேன். சமுசாரியாயிருப்பவன் தன்னையும் தனது மனைவியையும் திருப்திப்படுத்த வேண்டியவனு யிருக்கிறான். நான் இதுவரையும் என் மனைவியைக் கமத்தொழில் என்னும் நோக்கத்தில் என் பக்கமாய்த் திருப்பலாமென்று கூடியசாமர்த்தியமெல்லாம் பண்ணிக்கொண்டு வருகிறேன். இன்னும் நான் சித்தியடையவில்லை, சித்தியடைவேனுவென்பது எனக்கு ஐமிச்சமாயிருக்கிறது. இல்லாள் என்றால் விளக்குத் தண்டுகோல் போல இருக்கவேண்டும், கணவனின் நன்முயற்சியை உணர்ந்து அம்முயற்சியில் அவன் சோர்வுபடாது இருக்கும்படி அவனை இராப்பகலாய்த் தூண்டிக்கொண்டிருக்கவேண்டும். கணவன் தெய்வீகமாய் அம்முயற்சியில் மடிந்தால் அவன் அவனின் இடத்தை எடுத்து அவன் எடுத்த காரியத்தை இனிது முடிக்கவேண்டும், நமது காரியங்களில் நமது பெண்சாதி இடறுகட்டையாயிருக்கிறாள். இதுவரையும் நான் பொறுத்து மூடிவைத்தேன். இனி என்னுல் சகிக்க முடியாது. நான் கடவுளுக்குப் பயந்துதான் இதுகாறும் பொறுமையா யிருந்தேன். நான் இனி என் ஆன்மாவை வித்து என் குடும்பத்தைத் தாபரிக்க உடன்படேன். கடவுளுக்கும் அப்படிச்செய்வது சம்மதமாயிரா. நான் எனக்குப் பாரியைத் தெரிந்தெடுத்ததுபோல இதுவரையிலும் எக்காரியத்திலும் திருந்தக்கூடாத மாதிரியாய்ப் பிழைபடவில்லை, படித்தவளா யிருக்கவேண்டும் என்று விரும்பினதுதான் பெரும் பிழை. கடந்த காரியங்களைப்பற்றிப் பேசுவதிற் பிரயோசனமில்லை, நீரும் என்னைப்போல் பொறியில் அகப்படாமல் இருக்கவேண்டுமென்பதுதான் உண்மையான விருப்பம், மணியும் ஒன்று அடிக்கிறது. மற்றவர்களின் நித்திரையைக் குளப்பக்கூடாது. இன்னும் ஆறுதலாப் பின் பேசிக்கொள்வோம்.

கந்தையா:—சின்னத்துரை! நீர் "கொடுநம் போதையும் கொண்டதுவிடா"தென்னும் போக்குடையனி யென்று நான் முன் சொல்லவில்லையா? ஆகையால் ஒருவரும் உன்வழியில் நின்று தடுக்க இயலாது. நற்காரியங்களை ஆலோசனை செய்து நிர்மாணித்துத் தொடங்கும்பொழுது பலரும் இடறாய் நினைப்பது இயற்கை. அறிவில்லாதவர்கள்தான் இத்தடைகளை இடறாய் நினைப்பது புத்திமான் இவ்விடர்கள் எடுத்த காரியத்தை அனுகூலப்படுத்துவதற்குத் தூண்டும் சைகைக் கொடிகளாய்க் கருதுவார்கள் உத்தியோகக்காரன் பெண்டிருக்கு உத்தியோகத்தால் வரும் அதர்மத்தைப்பற்றி என்ன தெரியப்போகிறது. சீவியம் சுகமாயிருப்பதால் உத்தியோகந்தான் புருஷலக்ஷணம் என்று மதி மங்கியிருப்பார்கள். இம் மதியீனம் உமது மனையாளிடம் மாத்திரமல்ல பொதுவாய் எல்லாஉத்தியோககாரரின்பெண்களிடமு முண்டு. நீர் அதிகமாய் உம்முடைய பிழைகளைக்கவனிக்கும் போக்குடையவனுயிருப்பதால் உன் சிறு பிழைகளெல்லாம் உமக்கு இமயம்போல்தோன்றும், ஆகையால் அதைரியனப்படக்கூடியநியாயம் ஒன்றும் உமக்கில்லை. நான் கூடிய உதவிசெய்வதில் பின்னில்லேனென்பது உமக்கு நன்கு விளங்கும். சமாதானமாய்ப் பேசிக்கொள்ளலாம். உம்மைத் தேடிப் பொடியனும் வந்துவிட்டான். மன்னித்துக்கொள்ளும்.

சின்னத்துரை:—வணக்கம். போய்வருகிறேன். (வரும்.)

மலாய்நாட்டு வாசி,

இலக்கம் 18.

அரசாங்கவைத்திய சுகாதாரப்பகுதி வெளியீடு.

:o:

வைத்திய சுகாதாரடிப்பாட்மேந்திலிருந்து
1927ஆ ஐப்பசிமீ 22உ
பிரசுரித்து விடப்பட்ட கட்டுரையின்
மொழிபெயர்ப்பு.

தொற்றுநோயைப்பற்றி யாவருமறியவேண்டிய சில குறிப்புகள்.

1. தொற்றுநோயாற் பீடிக்கப்பட்டிருக்கும் நோயாளருக்கு அவசியஞ் செய்யவேண்டியது என்னவென்றால் டாக்குத்தரை வரவழைத்துக்காட்டி ஓர் தனிமையான இடத்தில் விடுவதே.

2. காய்ச்சல், வாந்தி, தொண்டைநோ, சரப்பன் அல்லது தொற்றுநோக்குரிய வேறு அடையாளம் ஆகிய இவைகள் ஓர் பிள்ளையில் காணப்பட்டால் அப்பிள்ளையைப் பள்ளிக்கூடத்திற்குப் போகவாவது அல்லது மற்றப் பிள்ளைகளுடன் கலந்து விளையாடவாவது விடப்படாது.

3. நெருப்புக்காய்ச்சல், வயிற்றுளைவு, பேதி, கண்டக்கரப்பன், வைசூரி ஆகிய இந்நோய்கள் திட்டமாய்த் தடுக்கக்கூடியவைகளா யிருக்கின்றமையால் ஒருவருக்கு நோய்கள் வரக்காரணமில்லை.

4. சின்னமுத்து, குக்கல், கொப்புளிப்பான் ஆகிய தொற்றுநோய்களினுல் பீடிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு டாக்குத்தரால் சுகமுண்டு. ஆகையால் அவரை வரவழைத்துக் காட்டுதல் வேண்டும்.

5. நோயைப்பரப்புந்தன்மையுடைய கிருமிகள் வெளியிற் பறந்து திரிகிறதில்லை.

தொற்றுநோய்கள் பின்வருவனவற்றிலிருந்து பரவுகின்றன:—

1. நோயாளியை அணுதல்.
2. இலகுவில் நோயின் குணத்தை அறியக்கூடாத நிலைபரத்திலிருக்கும் நோயாளியை அழைத்தல்.
3. நோயைப் பரப்புங் கிருமிகளுக்கு உறைவிடமாயிருந்து கொண்டு வெளித்தோற்றத்துக்குச் சுகதேகியைப்போல் காணப்படும் மனிதனை அணுதல்.
4. தவறின நோயாளியை அணுதல். அதாவது கண்டுபிடிக்கக்கூடாத அவ்வளவு சாந்தமான குணங்களையுடைய நோயால் பீடிக்கப்பட்ட மனிதனை அணுதல் மேலே சொல்லப்பட்டவைகளில் அங்கசங்கம் என்பது ஒருவர் ஒரு நோயாளியை முட்டுதல் அல்லது நோயாளியினுடைய இருமல் துப்பல் அல்லது பெலத்த மூச்சு ஆகிய இவைகளில் வாயிலிருந்து வெளியே வரும் நுரை அல்லது துளிகளினுல் தொற்றக் கூடிய சமீபத்திலிருத்தலே.
5. ஒருநோயாளியால் அல்லது நோய்பரவுங் கிருமிகளைத் தன்னிடத்திற் கொண்ட ஒருவரால் தொடப்பட்ட ஓர் பொருளை அணுதல். உதாரணமாகத் தன்னுடைய கையைத் தனது வாயினுள் அல்லது மூக்கினுள் சிலநேரத்திற்குமுன்னே தான் வைத்ததினுல் அழுக்குப்படுத்தினவருடன் கைகுலுக்கல், சிலநேரத்திற்குமுன்னே தான் கெட்டுப்போன உணவை உட்கொள்ளல், மற்றவருடைய கைலேஞ்சி அல்லது பானபாத்திரமாகிய இவைகளைப் பாவித்தல் போன்றன.
6. விளையாட்டுச்சாமான், புஸ்தகம், மோதிரம் ஆகிய இன்னோன்ன ஜீவனில்லாத வஸ்துக்கள் உடம்பிலிருந்து வரும் சீயால் அழுக்காகினுலன்றி நோயாளிகள் அல்லது நோய்க்கிருமிகளிருக்கும் தேகத்தை உடையவர்களிலிருந்து மற்றவர்களுக்கு நோயைத் தொற்றப்பண்ணமாட்டாது. அதிகம் அழுக்கடைந்த கைலேஞ்சியை அல்லது சணற் புடவையை மத்தியிற் போதுமான ஆடும் ஈரமுமிருக்கக் கூடியதாகச் சுருட்டிவைத்தல் போன்ற வழக்கத்துக்கு மாறான நிலைமையிலல்லாது நோய்க்கிருமிகள் 24 மணித்தியாலத்துக்குமேல் உயிருடன் இருக்கமாட்டா. பொதுவாக மனித உடம்பிலல்லாது மற்றுமிடங்களில் அவ்வளவு காலத்திற்குச் சீவிக்கமாட்டாது. ஆகையால் சீவனில்லாத வஸ்துக்கள் ஏக காலத்தில் நோயாளியாலும் சுகதேகியாலும் பாவிக்கப்பட்டாலன்றி நோயைப் பரவுதல் முக்கியமானவையல்ல.
7. தொற்று நோயாளரைப்பேணுதலில் நெருப்புத் தண்ணீரால் சுத்தம் பண்ணலும் ஆளுக்குரிய சுகாதாரத்தைக் கவனித்தலும் முக்கியமானவை.
8. தொற்று நோய் மாறியவுடன் வீட்டிற்குப் புகை அடித்தல் அவசியமில்லாததுமல்லாமல் கூடாத செயலுமாயிருக்கின்றது. அது ஒரு நன்மையுஞ் செய்யாமல் நல்ல சுத்தமாய் விட்டதென்னும் ஓர் பொய்யான அர்த்தத்தைக் கொடுத்துத் தீமையை விளைக்கிறது.
9. நோய் மாறியவுடன் நோயாளி இருந்த வீட்டைச் சரியாகச் சுத்தி பண்ணுதலும் அவர் பாவித்த சாமான்களில் அவிக்க வேண்டியனவற்றை அவித்தலும் நெருப்புத் தண்ணீரால் சுத்தம் பண்ணவேண்டியனவற்றை அதனுல் சுத்தம் பண்ணுதலும் அத்தியாவசியகம்.
10. எல்லோரும் நல்ல புத்தியாக நடந்தால் தொற்று நோய்களில் பெருந் தொல்லையானவை உண்டாகாதபடி காக்கலாம்.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டஙாசட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவு பிடிக்கும் பெரியகடை சி. வீரகத்திப்பிள்ளை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

இ.	உ.	ரூ.	
1926-ம்ஆ 9-ம்மீ			
3374	28	35	விசுவநாதர் தில்லைநாதர் சாவகச்சேரி பொன் தாலிக்கொடி தாலி உட்பட1
10-ம்மீ			
3410	7	36	கதிரவேலு பொன்னையா கொக்குவில் மேற்கு பொன் அட்சரக்கூடு 1, டிெ [முகப்பு 1
11-ம்மீ			
3478	16	35	அருமையர் முருகேசு அச்சுவேலி பொன் பட்டணங்காப்பு சோடி 1
1927-ம்ஆ 1-ம்மீ			
3611	29	100	வேலாயுதர் சோமசுந்தரம் பொன் முருக்கக் குத்தித் தாலிக்கொடி 1
3614	,,	30	தா. நா. சின்னத்தம்பி 3-ம் குறுக்குத்தெரு பொன் கம்பிப்பூரானட்டியல் 1
2-ம்மீ			
3668	19	12	சின்னத்தம்பி பொன்னுத்துரை வண் கிழக்கு பொன் மோதிரம் 1
3689	25	10	முத்ததம்பி கந்தையா பெரியகடை பொன் சிறுபிள்ளைக்காப்பு சோடி 1
3-ம்மீ			
3709	4	60	வயித்திநாதர் ஆறுமுகம் புங்குடுதீவு பொன் பூரானட்டியல் 1, டிெ மோதிரம்1
3903	8	200	கணபதிப்பிள்ளை மூத்ததம்பி வேலணை கிழக்கு பொன் சங்கிலித்தாலிக்கொடி1 பொன் கம்பிப்பூரானட்டியல் 1
5-ம்மீ			
4059	20	8	கணபதி சின்னத்தம்பி வண்கிழக்கு பொன்மோதிரம் 1
4071	24	12	யக்கேசு பெண் செபமாலை கரையூர் பொன் கவுத்தோர் 1, குடும்பி 1
7-ம்மீ			
4238	4	40	சின்னர் இளையதம்பி வண்கிழக்கு பொன் பூரானட்டியல் 1
4246	6	60	கணபதிப்பிள்ளை முத்துத்தம்பி வேலணை கிழக்கு பொன்பீலிக்காப்பு சோடி 1
4292	18	100	மூத்ததம்பி சபாபதி தின்னவேலி பொன்பூரானட்டியல் பதக்கத்துடன் 1 டிெ பட்டணக்காப்பு சோடி 1
4340	25	30	கந்தையா சுந்தரம்பிள்ளை வண்கிழக்கு பொன் இரட்டைப்பூட்டுச்சங்கிலி 1
4345	26	15	சின்னக்குட்டி செல்லையா சண்டிக்குளி பொன் சிறுபிள்ளைக்காப்பு சோடி 1 டிெ கல்வைத்த முகப்பு சோடி 1
8-ம்மீ			
4395	5	30	வேலாயுதர் அப்பாக்குட்டி புங்குடுதீவு மேற்கு பொன்பூரானட்டியல் 1
4413	8	45	கணபதிப்பிள்ளை முதத்துத்தம்பி வேலணைகிழக்கு தங்கப்பவுண் 4
4443	14	50	இராமு சின்னத்தம்பி வேலணைகிழக்கு பொன்பூரானட்டியல் 1
4464	18	13	தம்பையா வயித்திலிங்கம் ஆரியகுளத்தடி பொன் பின்கோக்கி 1
4552	26	8	பாமு சிதம்பரப்பிள்ளை கொக்குவில் கிழக்கு பொன் தாலிக்கொடி 1
9-ம்மீ			
4614	17	50	நாகமணி சுப்பையா கச்சேரியடி பொன்சங்கிலி அட்டியல் 1

விற்பனவு:—விபவஞு ஐப்பசிமீ 30 திகதிக்குச் சரியான (15-11-28) வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறந்கலாக மிகுதி டிெ கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார், வெந்திஸ்மேஸ்தர்.

(Mis. 1320.)

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டஙாச சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவு பிடிக்கும் கொட்டடி மா. கு. தெண்டாயுதபாணி என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படிசட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

இல	திக.	ரூ	ச.	நகைகளின் விபரம்.
1927-ம்ஆ செப்டெம்பர்மீ.				
d 1133	2	35		மு அப்துல்காதர் சோனகதெரு மணிக்கோர்வை ஒன்று
1386	10	8		ச. குசை கரையூர் பொன கவுத்தோர் ஒன்று
1432	11	52		A M அப்துலகாதர் சோனகதெரு பீலிக்காப்பு 2
1524	14	50	03	ச. இராசரெத்தினம் பிரப்பம் குளத்தடி பதக்கத்துடன் பூரான் அட்டியல்1
1606	16	7		மு உஸன்சாய்பு சோனகதெரு சிறுகாப்பு 2
1657	18	6		ச. மரியாம்பிள்ளை நாவாந்துறை கவுத்தோர் 1
1706	19	100		ஆ. இளையதம்பி நயினுதீவு V. அட்டியல் 1, பட்டணம்காப்பு 2
1720	19	3	03	வ இராயப்பன் கரையூர் கைச்சங்கிலி 2
1983	26	50	03	ச. ஆறுமுகம் கடையடி பவுண்கொடி 1
2029	27	8		மு கந்தையா செட்டித்தெரு காதப்பூ 2, கடுக்கன் 2
2047	27	15		ப. கச்சுமுகம்மது சோனகதெரு வெள்ளி பாதசரம் 2
2055	28	16	03	அ செயினுமுகம்மது சோனகதெரு மோதிரம் 2
2 64	28	6		இ வள்ளி சேணியதெரு அச்சரக்கூடு 1
2086	29	33	03	யூ ப அப்துல்றசாக் சோனகதெரு மோதிரம் 4
1927-ம்ஆ அக்டோபர்மீ				
d. 2206	2	30		அ பொன்னுத்துரை நாவாந்துறை பீலிக்காப்பு 2
2250	3	40		ஐ கார்த்திகேசு மண்டைதீவு அட்டியல் 1
2270	3	15	03	M. இராசையா பறங்கித்தெரு மோதிரம் 2
2285	4	65	03	H. M. செல்லவை சோனகதெரு பட்டணம்காப்பு 2
2286	4	202	06	M S முகம்மது பெரியகடை ஐந்து பட்டுமணிக்கோர்வை 1, பொன் மோதிரம 11, பொன் சவடி 2
2324	5	40		பொ தம்பிஐயா நல்லூர் அட்டியல் 1
2333	5	45		ப சாகுல்கமீது சோனகதெரு பொன்மோதிரம் 13
2347	6	10	03	ச குமாரசுவாமி வெள்ளாந்தெரு கவுத்தோர் 1
2410	8	15		க மீராசெல்லவை சோனகதெரு அட்டியல் 1
2418	8	60		M அப்துல்காதர் சோனகதெரு பட்டணம்காப்பு 2
2558	11	21		மா. வயிரமுத்து ஆனைக்கோட்டை சிறுகாப்பு 2
2599	12	200	03	கந்தப்பு வீரகத்தி பறங்கித்தெரு கொலிசு 2, பதக்கத்துடன் அட்டியல் 1
2620	13	15		சு. காதிறமுகைதீன் சோனகதெரு வாபுதிலக்கா 4
2625	13	10		வே. விநுசித்தம்பி வட்டுமேற்கு சிறுகாப்பு 1
2651	14	10		ஆ. மீருங்கண்டு வில்லூண்டி மோதிரம் 1
2657	14	13		ஐ கார்த்திகேசு மண்டைதீவு மோதிரம் 1, வாளி 2
2697	15	40		ஆ மீரான்கண்டு வில்லூண்டி முறிந்த சவடி ஒன்று 1
2704	15	20	03	யூ ப. மீராசாய்பு சோனகதெரு பதக்கத்துடன் கொடி ஒன்று புரோச்சு 1
2724	16	100		ஆ. சினியப்பா சோனகதெரு, பொன்கடயம் 2
2783	18	25		அ. பக்கீரி சோனகதெரு மணிக்கோர்வை 1, அலுக்குத்து 2, காப்பு 2
2790	18	25		மு. செய்கு அபுதாலிபு சோனகதெரு பொன்சவடி 1
2877	20	40	03	கா. காதிறாச்சியார் சோனகதெரு அலுக்குத்து 24
2924	22	12		சு ஐயாத்துரை நயினுதீவு கல்தோடு 2
2934	,,	18		வ பிம்பிப்பிள்ளை சிவியாதெரு கவுத்தோர் 1
2962	,,	8		மு. தம்பு புங்குடுதீவு மோதிரம 1
2975	23	15	03	ம. தியாகராசா செம்மாதெரு கைச்சங்கிலி 1
3022	25	30		யூ. ப. மீராசாய்பு ஐந்துசந்தி மோதிரம் 2, காப்பு முகப்பு 2, அரைப்பவுண்1
3024	,,	70	03	கா. தம்பு நகைவியாபாரி கொட்டடி பீலிக்காப்பு 2
3087	,,	42	03	அ மனுவல் கரையூர் பீலிக்காப்பு 2.

விற்பனவு:—விபவஞு ஐப்பசிமீ 28-ந் திகதிக்குச் சரியான (13—11—28) செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறந்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

(Mis. 1318.)

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.